Registerad as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

Y.M.C.A.

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 23 (08 - II - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 264

## மருத்துவ உபகரணங்களை கொதிநீரில் சுத்தமாக்குக

அரச மருத்துவமனைகளிலும், ஏனைய சிகிச்சை நிலையங்களிலும் மருத்துவ உபகரணங்களைக் கொதிக்கவைத்து சுத்தமாக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக்க சுகாதார, மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. கொதிநீரில் மருத்துவ உபகரணங்களைச் சுத்தமாக்கும் முறைகள் பற்றிய பணிப்புரைகள் சகல அரச மருத்துவ மனைகளுக்கும், சிகிச்சை நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இரத்தத்தின் மூலம் நோய்கள் பரவுவதைத் தடுத்தலே இதன் நோக்கமாகும். ஊசிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை ஆகக் குறைந்தது 20 நிமிடங்களாவது கொதிநீரில் (4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பாரிய ராணுவ நடவடிக்கை

# மட்டக்களப்பில் ஊரடங்கு பிரகடனம்

வீரச்சாவு



லெப். பார்த்திபன்



லெப். இளஞ்செழியன்



வட - கிழக்கில் காணாமல்போன

## அரச ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் பணிபுரிந்து காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என கிராமோதய மண்டபத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு தொடர்பான மாநாட்டில் எதிரணி அரசியல்வாதிகளினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்ன தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், வட - கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்கள், படை உயர் அதிகாரிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

காணாமல் போன ஊழியர்களின் ஊதியத்தை அவர்களின் குடும்பங்கள் பெற ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## ஐக்கிய இலங்கைக்குள் விரைவில் தீர்வாம்

(கொழும்பு)

நாட்டின் யுத்தநிலை நீங்கி மீண்டும் சமாதானம் ஏற்பட்டால் வருடம் தோறும் 1200 கோடி ரூபாவினை வேறு தேவைகளுக்கு பயன் படுத்தக்கூடியதாக அமையும் என வரவு செலவுத்திட்ட ஆலோசனையை சமர்ப்பித்து உரையாற்றிய டி.பி விஜயதுங்கா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் சமாதானம் ஏற்பட்டவுடன் வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவு அதிகரிக்கப்படும் எனவும் வருடம் ஒன்றுக்கு 8 சதவீத பொருளாதார வளர்ச்சி என்ற குறிக்கோளை அடைவதும் சாத்தியமாக அமையும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு கூடிய விரைவில் அரசியல் தீர்வு ஒன்றினைக் காண அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காடுகளில் தாக்குதல் தொடங்கலாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய ராணுவ நடவடிக்கைகள் அரம்பிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று அதிகாலையில் இருந்து காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்குஎதிராக பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறிலங்கா இராணுவ தரப்பினர் திட்டமிட்டு வருவதாகத் தெரியவருகின்றது

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையும், அதன்காரணமாகப் பெருமளவு படையினர் உயிரிழக்க வேண்டி ஏற்பட்டுள்ளதையிட்டும் சிறிலங்கா ஜனாதிபதி அக்கறைகொண்டுள்ளதாகவும், இதன்காரணமாகக் கிழக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறும் கூட்டுப்படைநடவடிக்கை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கு ஜனாதிபதி பிரேமதாசா நேரடியாக பணித்துள்ளதாகத் தெரியவருகின்றது இதைத்தொடர்ந்து ஜெனரல் ஹமில்டன்வனசிங்கா கிழக்கில் பாரிய தாக்குதலை நடத்தத் தயாராகி வருவதாகவும் தெரியவருகின்றது

அத்தோடு இந்த இராணுவ நடவடிக்கை பெரும்பாலும் காட்டு ஓரங்களிலும், காடுகளினுள்ளும் இடம்பெறலாம் எனவும் தெரியவருகின்றது

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று அதிகாலை 5.00 மணியிலிருந்து காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம்பிறப்பிக்கப்பட்டுள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம்களை படையில் சேர ஹமில்டன் பகிரங்க அழைப்பு

[மட்டக்களப்பு]

சிறிலங்கா இராணுவத்தில் இணைந்து கொள்ள வருமாறு கூட்டுப்படைதலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க முஸ்லிம் இளைஞர்களுக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்

இவர் ஏற்கனவே இவ்வாறான அழைப்பு ஒன்றை முஸ்லிம் கட்சிகளுக்கு கடிதம் மூலம் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்கள் வாழும் பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து கொள்ள வேண்டும். என்றும் கேட்டுக் கொண்டார்.

## கூட்டுப்படை தளபதி ஹமில்டன் மட்டக்களப்பு திடீர் விஜயம்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா கூட்டுப்படைத்

அவர் அங்கு தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க விஜயம் ஒன்றை மேற்கொண்



**2-ம் லெப். இமையன்**

யாழ்.மாவட்டத்தில் 5-11-92 அன்று கடலில் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி விடுதலைப் புலிகள் போராளிஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

லெப்டினன்ட் பார்த்தீபன் (விநாயகம் ஜயாத்துரை பிரபாகரன் புலோலி கிழக்கு, பருத்தித்துறை) என்னும் போராளியே இவ்வாறு வீரச்சாவு அடைந்தவராவார்.

இவர் வெடி விபத்தில் வீரச்சாவு அடைந்ததாக நேற்று வெளிவந்த செய்தி தவறானதாகும்.

✶ ✶ ✶

02-11-92 அன்று ஆனையிறவு கறுக்காய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருட

(4 ஆம் பக்கம் பார்க்க)

மேலும் அவர் தெரிவிக்கையில் சமாதானம் ஏற்பட்டவுடன் வெளிநாட்டு முதலீடு

னைக் காண அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணை எடுத்துவர அரச அதிபர் முயற்சி

தனியான கப்பல் ஒன்றின் மூலம் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய்யை எடுத்துவருவதற்கு யாழ். அரசாங்க அதிபர் காமாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

இந்த நடவடிக்கையின்மூலம் சுமார் 5 000 பீப்பா மண்ணெண்ணெய்யாழ் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படவிருக்கின்றது. இவ்விடயம்தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் அரச அதிபர் பேச்சு நடாத்தியிருக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

அநுராதபுரத்தில்

## மண்ணெய் லொறிகள் பல மாதங்களாக தடுப்பு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திற்கு தரைமார்க்கமாக எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெய் கடந்த பல மாதங்களாக அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இராமோதய மண்டபத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்ன தலைமையில் நடைபெற்ற புனர்வாழ்வு தொடர்பான மாநாட்டில கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழகத்திலிருந்து திரும்பியோர் சொந்த இடம் செல்கின்றனர்

(வவுனியா)

தமிழகத்திலிருந்து திரும்பி வந்து திருக்கோணமலை அகதி முகாம்களில் தங்கியிருந்த வடபகுதியைச் சேர்ந்த அகதி மக்களில் பலர் அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியாமலும் எந்தவிதமான உதவிகளையும் பெற்றுக் கொள்ளாமலும் வவுனியாவிற்கு வந்து சேருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த அகதி மக்களில் பலர் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகும். இராணுவக் கட்டுப்பாட்டற்றபகுதிகளுக்கு அகதிகள் மீள அனுப்பிவைக்கப்படமாட்டார்கள் என்ற அரசாங்க அதிகாரிகளின் அறிவிப்பையடுத்து இந்த அகதி மக்கள் உதவிகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் பரிதாபமாக வவுனியா வந்து சேருகின்றனர்.

இந்த அகதிமக்கள் வவுனியா ஊடாக முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் உள்ள தமது வீடுகளை நோக்கிச் செல்கின்றனர். [தி]

தமிழ்நாட்டில் பிறந்த பிள்ளைகளுக்கு

## பிறப்பு அத்தாட்சி பத்திரம் வழங்க மறுப்பு

(வவுனியா)

தமிழ்நாட்டில் தங்கியிருந்த போதுபிறந்தகுழந்தைகளுக்கு இலங்கையில் பிறப்புச் சான்றிதழ் பெறமுடியாது பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் அகதிமுகாம்களில் பிறந்த குழந்தைகளுக்கு இலங்கையில் பிறப்புச் சாட்சிப் பத்திரம் பெற பதிவதற்கு பெற்றோர்களின் கடவுச் சீட்டுக்களை பாதுகாப்பு அமைச்சு கோருவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவில் பதியப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 200 முஸ்லிம் இளைஞர்களை பொலிஸ், இராணுவ சேவைகளில் இணைத்துக் கொள்ளஇருப்பதாகவாத்தான்

## மாணவர் கல்வியில் தலைவர் ஆவலாக உள்ளார்

- செல்வராஜா

எமது தலைவர் மாணவர்கள் கல்வியிலே முன்னேற வேண்டும் என்பதில் மிகுந்த ஆவலாக இருக்கின்றார். மாணவர்கள் கல்வியிலே அக்கறையோடு ஈடுபடுவதற்கென கிராமங்களிலே பல கல்வி வளர்ச்சிக் கழகங்கள் உருவாக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.எமது மாணவர்கள் தொழில் நுட்பரீதியாக வளர வேண்டும் என்பதற்காக விஞ்ஞான கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன இவ்வாறு விடுதலைப் புலிகள் யாழ்-மாவட்டத் தளபதி செல்வராஜா நேற்று யாழ்- பல்கலைகழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற மேஜர் முரளி ஞாபகார்த்த பரிசளிப்பு விழா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு காலை 9-00 மணிதொடக்கம் 10-00 மணிவரை நெல்லியடி மகாவித்தியாலயத்திலும், பருத்தித்துறை வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு 10-30 முதல் 11-30 வரை வல்வை மகளிர் கல்லூரியிலும் 12-00 மணி முதல் 1-00 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரியிலும், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 3-00 மணிவரை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் 3-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை மட்டுவில் சரஸ்வதி மகாவித்தியாலயத்திலும் 4-45 மணி தொடக்கம் 5-30 மணி வரை நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் இடம் பெறும்.

(மட்டக்களப்பு)

சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்

அவர் அங்கு தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக தெரியவருகின்றது அத்துடன் அரந்தலாவயில் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதல் குறித்தும் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது

காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனைப்பகுதிகளுக்கு கூட்டுப்படைத் தளபதியான ஜெனரல் ஹமில்டன் வனசிங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டார் அவருடன் மட்டக்களப்பு பிரிவு பிரதி பொலிஸ் மா அதிபர் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர் பிஸ்வி சின்ன லெவ்வை ஆகியோரும் சென்றிருந்தனர் எனவும் முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரியவந்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு

## பல்வேறு துறைகளில் வேலை வழங்க முடிவு

வேலையின்றியிருக்கும் சகல பட்டதாரிகளுக்கும் இந்த வருட இறுதிக்குள் வேலைகள் வழங்கப்படுமென்று கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு அறிவித்துள்ளது

வேலையற்றிருக்கும் 7000 பட்டதாரிகளும் மேற்படி அமைச்சில் பதிவு செய்துள்ளதாகவும், இவர்களில் 1500 பேருக்கு மொழிபெயர்ப்பாளர் பதவிகளும், 22 தோட்ட முகாமைத்துவ கம்பெனிகள் உட்பட தனியார்துறை நிர்வாகப் பயிலுனர்களாக 2500 பேரும், சுங்கப்பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொதுத்துறைக் கம்பெனிகள் ஆகியவற்றில் 1000 பேரும்,ஆசிரியர் தொழிலில விரும்பிய பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளம் பாடசாலை இயங்கவைக்க முயற்சி

(வவுனியா)

செட்டிகுளம் பாடசாலையை இயங்க வைப்பதற்கு வவுனியா செயலக அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் பெரும் பிரயத்தனம் செய்து வருகின்ற போதிலும் அப்பாடசாலையில் கல்விகற்பித்து வந்த ஆசிரியர்கள் மீள அங்கு சென்று கற்பிப்பதற்கு பின் நிற்கின்றனர்.

செட்டிகுளம் பாடசாலையில் தற்போது இந்தியாவிலிருந்து திரும்பிவந்த அகதி மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இப்பகுதியில் பாடசாலையை செயல்பட வைப்பதில் இராணுவ அதிகாரிகள் பிடிவாதமாக உள்ளனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# அம்பாறை பாடசாலைகளில் சிங்களம் கட்டாய பாடம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் கட்டாய பாடமாக சிங்களம் கற்பிக்கப்படுகின்றது. இம் மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய பிரதேசத்தில் உள்ள சுமார் 180 பாடசாலைகளுள் 110 பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்படுகின்றது.

ஏனைய பாடசாலைகளில் அடுத்த தவணையில் இருந்து சிங்களம் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்டத்தின்உயர் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதி பிள்ளைகளுக்கு தமிழ் மொழிக் கல்வி கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லை ஆனால் சிங்கள மொழியை கற்பிக்க புதிய ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மரமதை நாட்டிட மழையது பொழியும்**

## வரி விளம்பரம்


### உடன் விற்பனைக்குண்டு

கறுப்பு + பிறவுண்சேவல்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு தொகையாக பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு விசேட சழிவுண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3220)

Prima + Bahira Hy – Line Christombu. பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்கம்பு ஆகிய இன பேட்டு குஞ்சுகள் + புறோயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும் மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் [3221]

### விற்பனையாகின்றது

சைவநெறி ஆண்டு 10—11, கந்தபுராணம் உற்பத்தி காண்டம், கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் (ஆறுபடை வீடு) சித்திரம் ஆண்டு 11, வாலி-உரையுடன் விற்பனையாளர்களுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3545)

### விற்பனைக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு, விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை யாழ்ப்பாணம். (3546)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், ரேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருததிக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல் பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும் கோவிந்த பிள்ளை விஜயகுமார் மிருதங்கதொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3570)

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவநெறி


# யாழ். பல்கலைக் கழகம் பஞ்சிகாவத்தையா?

**- அமைச்சர் ஹமீதின் தந்திரம்**

(யாழ்ப்பாணம்)

சந்தைவாய்ப்பற்ற மோட்டார் சைக்கிளுக்கு யாழ், பல்கலைக்கழகத்தில் புதிய சந்தை வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இப்புதிய சந்தை வாய்ப்பை உருவாக்கும் முயற்சியில்கல்வி உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி, எஸ், ஹமீத் வெற்றி கண்டிருக்கிறார், அமைச்சரின் நெருங்கிய உறவினர் ஒருவரின் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனமான ''கலாப் அன்சன்ஸ்'' என்ற நிறுவனத்தினால் யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலகு ரக மோட்டார் சைக்கிளுக்கு தென்பகுதியில் எதிர்பார்த்த படி சந்தைவாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் இந்த ரக மோட்டார் சைக்கிள்கள் மேற்படி நிறுவனத்தின் களஞ்சியத்தில் நீண்ட காலம் தேங்கிக் கிடந்தது.

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துப் பிரச்சினை நிலவுகிறது, இதனால் யாழ், பல்கலைக்கழக ஊழியர்கள் தமது கடமைக்குச் செல்வதற்கு பெரும் சிரமமடைகின்றனர் என்று உயர்கல்வி அமைச்சுக்கு முறையிடப்பட்டது, இச்சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திய உயர்கல்வி அமைச்சர் ஹமீத் மேற்படி மோட்டார் சைக்கிள்களில் ஒரு பகுதியை யாழ், பல்கலைக் கழக ஊழியர்களுக்கு தீர்வையற்ற முறையில் விற்பனை செய்வதற்கு முயற்சித்து வருகிறார், யாழ்ப்பாணத்திற்கு மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்வதற்குரிய அனுமதியை படைகளின் தலைமை அலுவலகத்திடமிருந்து மிக இலகுவாகப் பெற்றுக் கொண்ட அமைச்சர் மோட்டார் சைக்கிளும் மண்ணெண்ணெயும்வழங்கப்பட இருப்பதாக அறிவித்திருக்கிறார், (க)

## அலங்கார உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு, நெடுங்குளம் வேம்படி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 27ஆம திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெற்றுவருகிறது நேற்று சனிக்கிழமை காலை பத்து மணிக்கு விசேட சங்காபிஷேகமும், பூசை ஆராதனைகளும் இடம் பெற்றது.

மாலை விசேட பூசை, ஆராதனைகளை அடுத்து திருஊஞ்சலும், ஸ்ரீ ஞான வைரவர் வீதி உலா வருதலும் இடம்பெறும். (24)


வலி கிழக்கு வ. ப. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி


## வேலை வாய்ப்பு

கூட்டுறவு பேக்கரியில் - பாண், பணிஸ், சகல விதமான பிஸ்கட் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள தயாரிப்பாளர் தேவை. இவர் தலையாய தயாரிப்பாளராக இருப்பார். இத்தொழிற்பாடுகளில் வேலை செய்பவர்களை மேற்பார்வை செய்வதும் இவருடைய பொறுப்பாகும். நியாயமான சம்பளம் வழங்கப்படும். உங்களுடைய விபரங்களை குறிப்பிட்டு 17 - 11 - 1992 க்கு முன்பு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

பொது முகாமையாளர்.

(சி/ 5371)


## 04-ம் ஆண்டு நினைவஞ்சலி



பல்கலைக்கழக விரிவாக்கத்திற்காக

# அமைச்சரவை ஒதுக்கிய காணி இரகசியமாக தனியாருக்கு விற்பனை

மட்டக்களப்பு பல்கலைக் கழக விரிவாக்கத்திற்காக வென அமைச்சரவையினால் ஒதுக்கப்பட்டிருந்த நெற் சந்தை திணைக்களக் கட்டடமும் நிலமும், ஆடைதயாரிப்பு நிலையத்திற்கென தனியார் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஐந்து லட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட இக் காணி தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு விண்ணப்பித்திருந்தார். பல்கலைக்கழக நிர்வாகத்திற்காக விடுக்கப்பட்ட அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு டெண்டர் கோரப்படும் போது விண்ணப்பிக்கும்படி பதிலளித்த நெற்சந்தைப்படுத்தும் சபையினர் பின்னர் இரகசியமாக ஆடை தயாரிப்பு நிலையம்நிறுவுவதற்காக தனியாருக்கு விற்பனை செய்துள்ளனர்.

எனினும் ஜனாதிபதி தலையீட்டின் பின்னர் இந்த விற்பனை ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் முதல் கலைத்தேர்வு (1991) முதல் வணிகத்தேர்வு (1991) வணிக முகாமையின் முதல் தேர்வு (1991) சங்கீதம் மற்றும் பரதநாட்டியத் துறை டிப்புளோமா பயிற்சியின் முதல் தேர்வு (1991) என்பவற்றிக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.


## இந்து குருமார் ஒன்றிய வித்வத்சபை

இந்துமத குருமார்கள் செய்கின்ற நித்திய நைமித்திய காமிக கிரியைகள், பூர்வ, அபரக்கிரியைகள் விடயமாக எமக்கு வருகின்ற முறைப்பாடுகளை வேத ஆகம விதிப்படி தீர்ப்பதறகு இந்துமத குருமார் ஒன்றியம் வித்வத் சபையை நியமித்துள்ளது பின்வருவோர் வித்வத் சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1) சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் பேராசிரியர்
2) பிரம்மஸ்ரீ கோபால கிருஷ்ண ஐயர் பேராசிரியர்
3) சிவஸ்ரீ க. சாம்பசிவக்குருக்கள் நாயன்மார்கட்டு
4) சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் கோப்பாய்
5) சிவஸ்ரீ க செல்லப்பாக்குருக்கள் மாதகல்
6) சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் மட்டுவில்
7) பிரம்மஸ்ரீ வெங்கடேஸ்வர ஐயர் கொக்குவில்
8) சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் அரியாலை
9) பிரம்மஸ்ரீ ந. சதாசிவஐயர் யாழ்

வை, கருணாகரேஸ்வரக்குருக்கள்

செயலாளர்

இந்துமத குருமார் ஒன்றியம்

(சி-5375)

விசேட கழிவில்

## நைலோன் நூல் விற்பனைக்கு

பல இழைகளில் நைலோன் நூல் விற்பனைக்கு உண்டு.

தேவையானோர் தொடர்புகொள்ளவும்

**மொத்த விற்பனவு நிலையம்**

[மருத்துவக்கல்லூரி, அருகாமையில்]

கொக்குவில்


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் பேபி

(கந்தையா பஞ்சலிங்கம்)

வீரஜனனம்; 07-04-1972  
வீரச்சாவு: 21-10-1991

திதி: 08-11-1992

பாச மகனே எங்கள் பஞ்சலிங்கம்  
தேசத்தின் விடுதலை மாவீரன்  
யாகததில் நீயும் ஆகுதி மறவன்  
சோகத்தில் ஆழ்நது மிதக்கின்றோம்  
சொப்பனத்தில் உன்னைக் காண்கின்றோம்  
கானததில் இசைதது பாடுகின்றோம்  
புகழ்ந்து தினமும் போற்றுகின்றோம்  
ஈழத்தில் எங்கும் புலிக்கொடி பறக்கும்.

அன்பு மகனே பஞ்சலிங்கம்! உனது முதலாம் ஆண்டு திதியும், செல்வ மகளே கமலச்செல்வி! உனது ஆறாவது ஆண்டு திதியும் சேர்ந்த இத்தினத்தில் உங்கள் நினைவாக இறைவனை பிரார்த்தக்கின்றோம்.

களபூமி,  
காரை நகர்.

-குடும்பத்தினர்  
(3588)

## நினைவு கூருகின்றோம் ...

**1992-11-08**

1985-ம் ஆண்டு இதே தினத்தில், கட்டைப்பறிச்சான் பகுதியில வீரச்சாவெய்திய

★ இராசரத்தினம் குணரத்தினம்- (கட்டைபறிச்சான், மூதூர திருகோணமலை)

1986-ம் ஆண்டு இதே தினததில கிளிநொச்சியில, சிறிலங்காபபடையினா மேறகொணட துபபாககிச்சூட்டில வீரச்சாவெய்திய

2-ம் லெப். ஜான (சங்கரலிங்கம் இதயகுமார்-கணுக்கேணி, முளளியவளை)

1987-ம் ஆண்டு தும்பளைப் பகுதயில் இநதியபபடையினருடனான நேரடிச சமரில வீரசசாவெயதிய

சிறி (சொககலிஙகம சநதிரலிஙகம - குடததனை மேற்கு யாழ )

இன்பு (கிறிஸ்தோப்பர் இசிதோர் இன்பராசா - பருததித்துறை யாழ.)

கப்டன் நாதன் (சிற்றம்பலம் பிரபாகரன - அயபளை, பருததித்துறை யாழ் )

பண்டத்தரிப்புப் பகுதியில் இநதியப படையினரின சுற்றிவளைபபினபோது வீரசசாவெயதிய

2ஆம லெப். மயூரன சஙகரபபிளளை லோகேஸ்வரன-பளளபாா கோயிலடி காரைநகா - யாழ)

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவநெறி (ஆண்டு 11) துரித மீட்டலுக்கான வினா விடை ஆக்கம்: க. சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(சி-5356)

## திருமண சேவை

பொருத்தமான மணமகன்/மணமகள் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மங்களா ஏஜென்சி கொய்யாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை, (3586)

## எம் ஜி. ஆர் திருமணசேவை

பொருத்தமான மணமகன், மணமகள் தேடுபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் எம் ஜி ஆர் திருமண சேவை வே. புண்ணிய மூர்த்திமீசாலை. முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. (3356)


## நூல் வெளியீடு

Prof சத்தியதாஸன் எழுதிய பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா— நான் கடவுள் நூல் வெளியீட்டு வைபவம் இன்று காலை உடுவில் கிழக்கு ஆச்சிரமத்தில் வைத்தியகலாநிதி திரு வ. சின்னப்பு தலைமையில் நடைபெறும். (3600)

## தவறிவிட்டது

ஆலங்கேணி, நல்லூர், கிளாலி கடற்கரைப் பாதையில் சேலைகள், மண்எண்ணை அடுப்பு உட்பட சில பொருள்கள் 14-10-92 திகதி நீலநிறப் பையுடன் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் திரு க. இராசலிங்கம் 'கணபதிவாசா' வதரி, நெல்லியடி வடக்கு எனும் முகவரியில் ஒப்படைத்தால் சமன்னானம் வழங்கப்படும். (3663)

---



வீரவேங்கை

## கோட்டை சுக்ளா

**[கதிரிப்பிள்ளை ஸ்ரீநந்தகுமாரன்]**

| இம்மண்ணில் | இம்மண்ணிற்காக |
| --- | --- |
| 02. 06. 1968 | 08. 11. 1988 |

பாரினில் பரிதிபோல் பரியோவான் கல்லூரி
அறிவுச்சுடர் அகல் விளக்காய் உன்னுள்ளே
தூண்டிவிட்ட சுதந்திர வேட்கை
இம்மண் எங்கள் சொந்தமண் என்ற
ஈழத்தாகம் கொண்டாயே
மக்கள் வாழ்வில் ஒளியேற்றும் நின் நினைவு
உனக்கொளி தேடிக்கொண்டாயே அத்தீபாவளி நன்னாளில்
மறந்திடுமோ உன் நினைவு ஆண்டு நான்கானாலும்
சிறுப்பிட்டி வாழ் மக்கள் மனதின் நின்றே.

கோட்டை சுக்ளா வீதி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
1992. 11. 08

க. கதிரிப்பிள்ளை
குடும்பத்தினரும்,
உறவினர்களும்.
(சி-5360)

---

மொத்த விற்பனவு நிலையம்

[மருத்துவக்கல்லூரி, அருகாமையில்]

கொக்குவில்

தனியார் நிறுவனங்கள் சந்தை விலையிலும் 10 வீதம் கழிவு தள்ளிகொள்வனவுசெய்யலாம்

(சி-5376)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

| ஈழ மண்ணிற்காக | | ஈழ விடுதலைக்காக |
| --- | --- | --- |
| 05 | | 08 |
| — |  | — |
| 07 | | 11 |
| — | | — |
| 1961 | | 1987 |

## மேஜர் பசிலன்

**(நல்லையா – அமிர்தலிங்கம்)**

அந்நியன் வந்த போது அடிபணியாத
பண்டார வன்னியனின் பழம் பெரும் பூமியில்
பதிகொண்டிருந்த பாரதப்படையை
அங்கிருந்து விரட்டுவதில்
அளித்தாயே இன்னுயிரை,
முள்ளியவளையிலே முத்தாக வந்த
பசிலா!
ஆண்டுகள் ஐந்தென்ன
ஐம்பதுதான் கடந்தாலும்
இதயங்கள் தன்னில்
இருப்பாய் நீ என்றும்.

ச சந்திரிகா
128, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (3559)

என்றும் உன்பிரிவால் வாடும்
அன்பு அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள் உற்றார், உறவினர்
நண்பர்கள்.

---

பருத்தித்துறை யாழ்.)

பண்டத்தரிப்புப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவடைந்த

**2ஆம் லெப். மயூரன்** (சங்கரப்பிள்ளை லோகேஸ்வரன் - பளை வீமன்காமம் கோயிலடி காரைநகர் - யாழ்)

கீரிமலைப் பகுதியில், இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைந்த

**ஜெயம்** (இராமச்சந்திரம் ஜெயக்குமார் - வலித்தூண்டல் கீரிமலை, யாழ்)

முள்ளியவளை 3 ஆம் கட்டைப் பகுதியில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைந்த

**மேஜர் பசிலன்** (நல்லையா அமிர்தலிங்கம் - 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை, முல்லைத்தீவு)

**2 ஆம் லெப். கிரிசாந்தன்** (யோகராசா அருளானந்தம் - மசம்பலை மணலாறு)

1988 ஆம் ஆண்டு நீர்வேலி, சிறுப்பிட்டி தெற்குப் பகுதியில் இந்தியப்படை சூட்டில் வீரச்சாவெய்திய

**கோட்டை சுக்ளா** (கதிரிப்பிள்ளை ஸ்ரீநந்தகுமாரன் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி, யாழ்)

அளவெட்டியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**பிரேமகுமார்**

சாவகச்சேரியில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மாணவன்.

பண்டத்தரிப்பில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இப்பகுதி பிரஜைகள் குழுத் தலைவர்.

1990-ம் ஆண்டு, வசாவிளான் பகுதியில், சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். சிரஞ்சீவி** (கனகசபாபதி ஐங்கரன் - சுன்னாகம் தெற்கு யாழ்.)

தச்சன்காட்டுப்பகுதியில், சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்தநிலையில் மானிப்பாய் வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய

**கப்டன் செந்தில்** (சுப்பிரமணியம் குலஞானேஸ்வரன் - மாதகல் கிழக்கு யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5374)

### சிந்தனைக்கு

புதுப் பரிகாரங்களை மேற்கொள்ள மாட்டாதவன், புதுக்கேடுகளுக்குத் தயாராக இருக்க வேண்டும். புதுமைகளைப் புகுத்தும் தலையாய சக்தி காலம்.

-ஃபிரான்ஸிஸ் பேக்கன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 08-11 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் -05

# தீர்வு சரியானது தலைமை சரியில்லை

"இன்று வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை, நாட்டில் இன்றுள்ள எந்த ஒரு அரசியல் கட்சியினாலும் முடிவுக்குக் கொண்டுவர முடியாது எனவே நாட்டிலுள்ள சகல புத்திஜீவிகளும் கலைஞர்களும், தலைவர்களும் ஒன்று திரண்டு நாட்டை மீட்க முன்வரவேண்டும்'' இவ்வாறு கோட்டே நாக விகாராதிபதி மாதுளுவாவே தோபித தேரோ தெரிவித்துள்ளனர். ''மேலும் இந்தியா மாத்திரமின்றி முழு உலகமுமே தமிழ்ப் 'பயங்கரவாதிகளுக்கு' எதிராகப் போராடத் தயாராக உள்ளது, ஆனால் நம்மில் சிலர் களியாட்டங்களிலும் விழாக்களிலும் நேரத்தைச் செலவிடுகின்றோம்.'' எனவும் தெரிவித்தார்.

கோட்டே நாகவிகாராதிபதிகுறிப்பிட்டதுபோல் வடக்கு - கிழக்கில் இன்று நடைபெறும் போரை இன்றுள்ள அரசியல் கட்சிகள் எவையும் முடிவிற்குக் கொண்டுவர முடியாது என்பது ஏற்புடைய தொன்றேயாகும். ஏனெனில் கடந்த காலத்தில் சிங்கள அரசியல் கட்சிகள் யாவற்றிற்கும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தும் அவை அதனை நிறைவேற்றவில்லை.

இலங்கையிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறிய பின்னர் பிரதான சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறியே ஆட்சியில் இருந்து வந்தன. அத்தோடு, சிறு அரசியற் கட்சிகளும் காலத்திற்குக் காலம் மாறிமாறி பெரிய அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டன.

ஆனால் இக்கட்சிகள் எவற்றாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை. மாறாக காலத்துக்குக் காலம் இக் கட்சிகள் யாவும் ஆட்சியில் இருக்கும் போதும், எதிர்க்கட்சிகளாக இருக்கும் போதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் இனப்பிரச்சினையை மேலும்சிக்கலாக்கினவே ஒழிய பிரச்சினையைத் தீர்வு நோக்கி இட்டுச்செல்லவில்லை.

இதே வேளை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக தீவிரம் பெற்று நடைபெற்ற காலகட்டம் முழுவதும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியில் இருந்து வரினும், பிரதான எதிர்க்கட்சியான சிறி

# தோட்டம் ஏலத்தில் விற்பனை 70 தொழிலாளர் நிர்க்கதி

(சம்பளை)

சம்பளை புரதன்னை தனியார் தோட்டம் நீதிமன்றத் தீர்ப்பின்படி ஏலத்தில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டிருப்பதனை தொடர்ந்து, அங்கு வேலை செய்து வந்த சுமார் 70 தொழிலாளர்கள் வேலை இன்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்,

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, மேற்படி தோட்டத்தை தோட்ட நிர்வாகம் வங்கியில் அடகு வைத்துக் கடன் பெற்றதன் மூலம் வங்கிக்கு 26 இலட்சத்து 20 ஆயிரத்து 643 ரூபா செலுத்த வேண்டி இருப்பதனால் மேற்படி வங்கி கொழும்பு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது அதன் மூலம் தோட்டத்தை ஏலத்தில் விற்பனை செய்யும் தீர்ப்பைப் பெற்று அறிவித்தல் கொடுத்துள்ளது.

இதனால் தொழிலாளர்கள் கொடுப்பனவுகள் எதுவுமின்றித் தோட்டத்தை விட்டு வெளியேறும் நிலை உருவாகியுள்ளது.

# செயலகத் திறப்பு ஒத்திவைப்பு அமைச்சர், முதல்வர் ஏமாற்றம்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகத் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக வவுனியா வந்திருந்த ராஜாங்க அமைச்சர் ஒருவரும் முதலமைச்சர்ஒருவரும் பலத்த ஏமாற்றமடைய நேர்ந்துள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா பிரதேச செயலகம் கடந்த வியாழனன்று திறப்புவிழா செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது என்றும் அதற்காக கல்விராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரனும் வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவும் அழைக்கப்பட்டிருந்தனர் என்றும் ஆனால் திறப்பு விழா திடீரென ரத்துச் செய்யப்பட்ட செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்படாததால் வவுனியா வந்த அவ் இருவரும் பலத்தஏமாற்றமடைந்தனர். இதன்பின்னர் காமினி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஐ. தே. க. வின் வவுனியாக்கிளையின் புனரமைப்புக் கூட்டத்தில் அவர்கள் கலந்துகொண்டனர்.

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

இடவசதி, நூலக வசதி, போன்ற கோரிக்கைகளை முன்வைத்து செவ்வாயன்று ஆரம்பித்த பகிஷ்கரிப்பு போராட்டம் வியாழன் வரை தொடர்ந்து இடம்பெற்றது பல்கலைக்கழக உயர் அதிகாரி ஒருவரைப் பணயமாகப் பிடித்து வைத்த மாணவர்கள் உபவேந்தரின் வாசனத்தை சேதப்படுத்தியிருப்பதாக வும், தெரிய வருகின்றது. மாணவர்களின் இந்த நடவடிக்கைகளால் பல்கலைக்கழக அலுவலகங்கள் சில தினங்களாக செயலிழந்துள்ளன என்றும், தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை பகிஷ்கரிப்பு தொடரும்என்றும் முகாமைத்துவபீட மாணவர் அவை கூறியுள்ளது என்று மேலும் தெரிய வந்துள்ளது,

# அவசர கால சட்டத்தை நீக்கக்கோரி பிரசார இயக்கம் ஆரம்பம்

[கொழும்பு]

அவசரகாலச் சட்ட விதிகளை நீக்கும்படி கோரி பதின்மூன்று எதிர்க்கட்சிகள் பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த போ இதுபற்றித் தெரிவித்தார் அப்போது அவர் மேலும் கூறுகையில் நவம்பர்; 11 ஆம் திகதியன்றுகொழும்புடி.மெல் பூங்காவில் 13கட்சிகள் இணைந்து பகிரங்க பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்படுமெனவும், அதில் அவசரகால சட்ட விதிகளை நீக்கும்படியும், இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண உதவி குறைக்கப்படக் கூடாது எனவும் வலியுறுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் இடம் பெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் அவசர கால விதிகளை நீக்கும்படி அரசை வலியுறுத்துவதற்கான அமைதி வழியிலான எதிர்ப்பு போராட்டத்தில் மக்களை ஈடுபடுத்துவது பற்றி அறிவிக்கப்படும் என்று ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி குறிப்பிட்டார். அத்துலத் முதலி மேலும் கூறுகையில் வடக்கு - கிழக்கு பகுதியில் நடைபெறும் போருக்கு அவசரகால சட்ட விதிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

நவசமசமாஜக் கட்சியின் வாசுதேவ நாணயக்கார இது பற்றிக் கூறுகையில் அவசர கால சட்டவிதிகளை அரசு தவறாகப் பயன்படுத்தி வருவதாகவும், தொழிற்சங்க நடவடிக்கைகளை அரசுகட்டுப் படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

# ஆடைத்தொழிற்சாலைக்கு நியமனம் ஐ. தே. க. வினருக்கே முதலிடம்

### - அத்தாவுட குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆடைத்தொழிற்சாலைகளுக்கு ஆட்களை திரட்டும் போது திறமையடிப்படையில் நியமனங்கள் வழங்குவதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இத்தொழிற்சாலைக்கு ஆட்கள் திரட்டும் போது ஐ. தே. கட்சி உறுப்பினர்களுக்கு முதலிடம் அளிப்பதில் ஐ. தே. கட்சி எம். பிக்கள் தலையீடு செய்கின்றனர்

இவ்வாறு கேகாலை மாவட்ட எம்.பி. அத்தாவுடசெனிவிரட்ண பாராளுமன்றத்தில் பாரிய கொழும்பு பொருளாதார சட்டமூல விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

இங்கு ஆடைத்தொழிற்சாலை நிறுவனம் ஒன்று லண்டனிலுள்ள கம்பெனியுடன் தொடர்பு உடையது. இதில் இஸ்ரேலியர்களுக்கு தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது ஆயுதங்களை விற்பனை செய்வதிலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. இக் கம்பனிக்குச் சொந்தமான நூறு கொள்கலன்கள் வருகின்றன ஆனால் பத்தே திரும்பிச் செல்கின்றன. இவற்றில் மிகுதிக்கு என்ன நடக்கின்றது என்பதனை அரசாங்கம் ஆராய வேண்டும் எனத் தெரிவித்தார்.

# சுமையாகிய அரச நிறுவனங்கள் மக்கள் மயமாக்கப்பட்டன

### பிரேமதாசா

(கொழும்பு)

மக்களுக்கு சுமையாக இருந்த பொதுத்துறை நிறுவனங்களே மக்கள் மயப்படுத்தப்பட்டன என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார். கொலன்னாவ பிரதேச கம் உதாவ கொண்டாட்டங்களின் இறுதி வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இலங்கைப்போக்குவரத்து சபையை பராமரிப்பதற்காக வருடாந்தம் நாற்பதுகோடி ரூபாவரை திறைசேரிசெலவிட வேண்டியிருந்தது தோட்டத் தொழிலாளருக்கு மாதாந்தச் சம்பளம் கொடுப்பதற்காக மேலும் நாற்பது கோடி ரூபா செலவிடப்பட்டது. இப்போது இந்த இரு நிறுவனங்களும் மக்கள்மயப்படுத்தப்பட்டதால் பணம் பெருமளவில் மிச்சமாகி இருப்பதாகவும் அதனாலேயே சம்பள உயர்வு சாத்தியமாகிறது என்றும் பிரேமதாசா குறிப்பிட்டார்.

# சிறுவர்களுக்கான அமைதி வாரம் ஐ.நா. சிறுவர் நிதியம் பிரகடனம்

(சரஜெவோ)

சரஜெவோவிலும் பொஸ்னியா ஹெர்சகே வினாவிலும் சண்டையின் உக்கிரத்தையடுத்து சமாதானத்தை நிலை நிறுத்தும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன

உக்கிரமடைந்த இந்தச் சண்டைகளுக்கு மத்தியில் ஒன்றுமே அறியாத சிறுவர்கள் பலிக்கடாக்களாக சிக்கித் தவிக்கின்றனர்.

சிறுவர்கள் அங்கு அனுபவிக்கும் இன்னல் கண்டு ஐ.நா. சிறுவர் நிதியம் கடந்த ஞாயிற்றுக்கிழமையை ''சிறுவர்க்கான அமைதி'' வாரமாக பிரகடனப்படுத்தியது.

இங்குள்ள சிறுவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு யுனிசெப் டிரக்குகள் மருந்துப் பொருள்களையும் உணவுகளையும் ஏற்றிக்கொண்டு சரஜெவோ விரைந்துள்ளது.

எனினும் சிறுவர்க்கான அமைதி வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு சில மணி நேரங்களுக்குள் இயந்திரத் துப்பாக்கிகளின் வேட்டுச்சத்தங்கள் சரஜெவோ நகரை அதிரச் செய்ததாகவும் போராட்டத்துக்கு அஞ்சி நடுங்கும் சிறுவர்களுக்கு இவ்வேட்டுச் சத்தங்கள் மேலும் அச்சத்தை ஊட்டுவதாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

செர்பியர்களின் இத்தாக்குதலுக்கு விளக்கமளிக்க வேண்டுமென ஐ.நா. துருப்புக்களின்

# மாற்று உறுப்புக்கள் ஐந்து பொருத்தப்பட்ட சிறுமி

(பிட்ஸ்பேர்க்)

ஐந்து உறுப்புக்கள் மாற்று சத்திரசிகிச்சை செய்த பின்னும் நான்கு வயது அமெரிக்க சிறுமியொருத்தி உயிர் பிழைத்துள்ளார்.

மொன்டானாவைச் சேர்ந்த சார்ளி பௌஸ்டர் என்ற சிறுமியின் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட உறுப்புக்கள்யாவும் இயங்குவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

பிட்ஸ்பேர்க் மருத்துவ மத்திய நிலைய பேச்சாளர் ஒருவர் இது பற்றிக் கூறுகையில் செயற்கை உபகரண துணையுடனேயே இப்போதும் சுவாசிக்க முடிகிறது. இரண்டு தினங்களில் இந்நிலை மாறிவிடும் எனத் தெரிவித்தார்.

இவளுக்கு புதிதாக ஈரல் ஒன்றுடன் சிறுகுடல்,

முழுவதும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியில் இருந்து வரினும், பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும்இக்காலத்தில்இனப்பிரச்சினைத் தீர்விற்கான திட்டம் எதையும் முன்வைக்கவில்லை அதாவது இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஆட்சியிலுள்ள கட்சியிடம் எவ்வாறு தீர்விற்கான திட்டம் இல்லையோ அதேபோன்றே எதிர்க்கட்சியிடமும் தீர்விற்கான திட்டம் எதுவும் இல்லை,

எதிர்க்கட்சியும், இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் போன்றே இராணுவத்தீர்வையே முன்வைப்பதாகத் தெரிகிறது சில தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த டி எம் ஜெயரெட்ணா ''இந்த யுத்தத்தில் வெற்றிபெற இந்தியாவின் உதவி அவசியமாகும் புலிகளைத் தோற்கடிக்க ஏன் இந்தியாவின் உதவியை நாடக்கூடாது'' எனக்கேள்வி எழுப்பியுள்ளார்.

அதாவது, அரசாங்கத்தைப் போன்றே இனப்பிரச்சினைககு அரசியல் தீர்வை முன்வைக்காத சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், இனப்பிரச்சினைக்கு அந்நிய சக்திகள் யாருடனாவது கூட்டுச்சேர்ந்து இராணுவத் தீர்வை எட்டிவிடலாம் என எண்ணுவதாகவே உள்ளது. இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண எதிர்க்கட்சிக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கி ஓர் சந்தர்ப்பம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று துணிந்து கூறலாம். இந்நிலையில், கோட்டே நாக விகாரை விகாராதிபதியின் அரசியல் கட்சிகளால் தீர்வு காண முடியாது என்ற குற்றச்சாட்டுப் பொருத்தமானதே.

ஆனால், விகாராதிபதி புத்திஜீவிகளும், கலைஞர்களும் தலைவர்களும் ஒன்றுதிரண்டு எவ்வாறான தீர்வு காண விளைகின்றார் என்றால் அதுவும் இராணுவத்தீர்வாக இருப்பதே ஆச்சரியம் ஊட்டுவதாக உள்ளது. அதாவது விகாராதிபதியின் எண்ணத்தின் பிரகாரம் தற்பொழுதுள்ள அரசியல் கட்சிகள் இராணுவத் தீர்விற்கு தலைமை தாங்க தகுதியில்லாதவர்களாகவுள்ளனரே ஒழிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் சரியான வழி என்பதாகும்

அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்படும் பேரினவாதச் சிந்தனையை இவ்வளவு இரத்தக்களரியின் பின்பும் பிக்குகள் கைவிடவில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மூலம் அமைதியும் சாந்தமும் ஏற்படுத்த அவர்கள் எண்ணவுமில்லை. இந்நிலையில் சிங்களபௌத்தபிக்குகள்என்றுபுத்தபிரானின்போதனையை ஏற்று கொலையை வெறுத்து ஆசைகளைத் துறககின்றார்களே அன்றே இலங்கையில் அமைதியும் சாந்தமும் ஏற்பட வாய்ப்புண்டாகும்.

## கருணாநிதியே ஊழலை அறிமுகம் செய்தவர்

(சென்னை)

செல்வி ஜெயலலிதா பதவியேற்று எண்ணற்ற சாதனைகளை புரிந்துள்ளார். அவரைக் களங்கப்படுத்தவே ஊழல்கள், முறைக்கேடுகள் என்று கருணாநிதி சொல்லி வருகிறார். தமிழ்நாட்டில் ஊழல்களை அறிமுகம் செய்துவைத்தவரே கருணாநிதிதான்,

இவ்வாறு அ. தி. மு. கவின் 21வது ஆண்டு தொடக்கவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்நாட்டு பாடநூல் தலைவர் சுலோசனா சம்பத் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; கருணாநிதியின் நண்பனான மூப்பனாருக்கு இப்போ முதலமைச்சராக வரவேண்டும் என்ற ஆசை பிறந்துள்ளது காங்கிரஸ் கூட்டணியை உடைப்பதற்கு துடிக்கிறார்.

இதேவேளை செல்வி ஜெயலலிதா அரசு நில உச்ச வரம்புச் சட்டத்தை இயற்றி அதனைதீவிரமாக அமுல்படுத்தஅதனைமத்தியஅரசின்ஒப்புதலுக்கு அனுப்பி உள்ளார். இந்நிலைநிலப்பிரபுலான மூப்பனாரை பாதிப்படையச்செய்யப்போகிறது. இதனாலேயே முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியினை ஒழித்துவிடத் துடிக்கிறார். மூப்பனாருக்கு சொந்தக் கட்சிக்குள்ளேயே செல்வாக்கில்லை மக்களோடு தொடர்பு இல்லை.

இந்நிலையில் இவர் நாட்டை ஆளவேண்டும் என ஆசைப்படுகிறார் இதற்காகவே அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியை உடைக்கும் வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார் எனத் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் பாராளுமன்றம் மயிரிழையில் தப்பியது

கடந்த புதன் இரவு பிரிட்டன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மசோதா ஒன்று மூன்று வாக்கு வித்தியாசத்தில் வெற்றியீட்டியது

மிகுந்த விறுவிறுப்பான ஐரோப்பிய ஒற்றுமை குறித்து சர்சைக்குரிய 'மாஷேடட்' ஒப்பந்தத்தை பிரிட்டன் ஏற்பதா இல்லையா என்பதற்கான விவாதம் பிரிட்டன் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இந்தவிவாதத்திற்கு ஆதரவாக 319 வாக்குகளும் எதிராக 316 வாக்குகளும் கிடைத்தன

## மலேரியாவை குணப்படுத்த புதிய மூலிகை மருந்து

(அம்ஸ்டர்டாம்)

நுளம்பினால் ஏற்படும் மலேரியா நோயை துரிதமாக குணப்படுத்தக் கூடிய மருந்து ஒன்று விரைவில் விற்பனைக்கு வரும் என்று உலக சுகாதார ஸ்தாபனவிஞ்ஞானிகள்கடந்த செவ்வாயன்று தெரிவித்தனர்.

இந்த மூலிகை மருந்துஇரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக சீனாவில் மலேரியா நோயைக் குணப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது.

டுமென ஐ நா. துருப்புக்களின் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

## உணவு முத்திரை அமெரிக்காவிலும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் உணவு முத்திரை பெறுவோரின் எண்ணிக்கையில் பெருமளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது போதுமான அளவு உணவு பெறுவதற்காக அமெரிக்காவில் உணவு முத்திரை வழங்கப்பட்டு வருகிறது

மேற்படி உணவு முத்திரைத் திட்டத்தின்கீழ் இதுவரையில் 2,58,80,000 பேர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அமெரிக்க மக்களில் 10.25 சதவிகித மக்கள் உணவுமுத்திரை பெறுபவர்கள் என்றும் மேலும் தெரிய வருகிறது.

## ஜனாதிபதி தெரிவு

(அக்ரா)

மேற்காபிரிக்க நாடான கானாவின் அதிபராக ஜெரி ரோலின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக கடந்த வியாழன் அக்ராவின் இடைக்கால தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

நாற்பத்தைந்து வயதான ஜெரி ரோலின் 58வீத வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும் அவருக்கு எதிராக போட்டிட்ட அல்பட் பொபின் 29 9வீத வாக்குகளைப் பெற்றுள்ளதாக தெரிவிக்சப்படுகிறது

எனினும் இத்தேர்தலில் முறைகேடுகளும் மோசடிகளும்நிறைந்துள்ளதாக நான்கு எதிர்க்கட்சிகள் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளதுடன், நாட்டில் இவ் அரசியல், ஸ்திரமற்று ஆட்ட நிலையே கண்டு வன்முறை மூளும் என எச்சரிக்கை விடுத்துள்ளன

கடந்த 11ஆண்டுகளாக ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரியான ஜெரிரோலின் இராணுவ ஆட்சியின் கீழ் கானானை ஆண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது

இவளுக்கு புதிதாக ஈரல் ஒன்றுடன் சிறுகுடல், பெருங்குடல், நொதியத்தொகுதிகள் என்பன மாற்றுச் சிகிச்சை மூலம் வயிற்றில் பொருத்தப்பட்டுள்ளன.

## உக்ரைன் இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் தப்பி ஓட்டம்

(கீவ்)

புதிய இராணுவம் அமைக்கப்பட்ட பத்துத் தினங்களில் எண்ணூறு பேர் தப்பியோடிவிட்டதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார். முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து உக்ரைன் சுதந்திரமடைந்த பின்னர் அமைக்கப்பட்ட புதிய இராணுவத்திலிருந்து கடந்த அக்டோபர் மாதம் முதல் ஆயிரக்கணக்கானோர் விலகி வருவதாகச் சொல்லப்படுகின்றது. இதுபற்றிக் கூறிய உக்ரைனின் தற்காலிக முப்படைத்தளபதி லெப்.ஜெனரல் ஜியோர்ஜி ஸிவிட்ஸா மேலும் கூறுகையில், 21 சத விகிதத்தினர் இராணுவ சேவையில் இருக்க விரும்பாததாலும், 19 சத விகிதத்தினர் வீட்டு நினைவினாலும், 18 சத விகிதத்தினர் ஒழுங்கீனம் காரணமாகவும், 15 சத விகிதத்தினர் மேலதிகாரிகளால் மோசமாக நடத்தப்படுவதாலும் இராணுவத்திலிருந்து தப்பியோடுவதாகக் குறிப்பிட்டார்.

முன்னாள் சோவியத் யூனியனின் புதிய பொதுநலவாயத்துடன் இராணுவத் தொடர்பை வைத்துக் கொள்ள மறுத்து வரும் உக்ரைன் 6,50,000 வீரர்களடங்கிய இராணுவத்தை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

## கிளிங்டனுக்கு ராவ் வாழ்த்துச் செய்தி

[டில்லி]

உங்களுடைய தேர்தல் பிரசார இயக்கம் இந்தியாவிலிருக்கும் கோடிக்கணக்கான மக்களால் ஆர்வத்துடன் அவதானிக்கப்பட்டது என்று அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பில் கிளிங்டனுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இந்திய பிரதமர் பி வி. நரசிம்மராவ் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்; உலகின் இருபெரும் ஜனநாயக நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பு வலுப்பெறவேண்டுமெனவும், பரஸ்பர நலன்களின் அடிப்படையில் நம்பிக்கையோடு பொறுப்புக்கள் பகிரப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல் அரசுக்கு எதிரான பிரேரணை தோல்வி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் அரசுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைஒன்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

நான்கு எதிர்க்கட்சிகள் இணைந்து கொண்டு வந்த இப் பிரேரணை 59-51 என்ற வாக்குகள் அடிப்படையில் தோல்வி கண்டிருப்பதால் பிரதமர் யிட்ஷாக் ராபீன் தமது சமாதானக் கொள்கைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்லும் சாத்தியம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# ஈழநாதம்

## நிதி சேகரிப்பு கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களின் கலை வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பிற்காக கலை நிகழ்ச்சி ஒன்று இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற உள்ளது.

இக்கலை நிகழ்ச்சியில் ''காணி நிலம் வேண்டும்'' என்னும் நாடகமும், களத்தில் காத்தான்'' என்னும் சிந்து நடைக் கூத்தும் இடம்பெறுகின்றன.

### ஐக்கிய

வித்த அவர், சமாதானம் ஏற்பட்டால் வெளிநாட்டு முதலீட்டு மட்ட அதிகரிப்பால் வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கும் தொழில் நுட்ப மாற்றங்களும் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

### மண்ணெய் லொறி

திரு கா. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்தமையால் பல மாதங்களாக லொறிகள் அங்கு தரித்து நிற்கின்றன இந்த லொறிகள் தரித்து நிற்கும் இடத்தின் உரிமையாளருக்கு மட்டும் மாதாந்தம் பத்தாயிரம் ரூபாவை வாடகையாகச் செலுத்துகின்றோம் என்றார்.

### மருத்துவ

வைத்திருக்க வேண்டுமென மருத்துவமனை அதிகாரிகளுக்குப் பணிப்புரை செய்திருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜோ. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். மஞ்சள் காமாளை போன்ற நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளை இந்த முறையினால் அழிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

## பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாக இருக்கிறது.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் 17வயது பிரிவில் யாழ் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அணிக்கும் புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டியும், 19வயது பிரிவில் புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் நெலலியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான போட்டியும் நடைபெற இருக்கிறது. யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் 17 வயது பிரிவில் புனித சாள்ஸ் மத்திய மகா வித்தியாலயத்திற்கும், யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியும், 19 வயது பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரிக்கும் இடையிலான போட்டியும் நடைபெற இருக்கிறது யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் 19 வயது பிரிவில் மகாஜனக் கல்லூரிகும் ஹாட்லிக் கல்லூரிக்கும்இடையிலான போட்டியும், புங்குடுதீவுமகாவித்தியாலயத்துக்கும் கனரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான போட்டியும் நடைபெற உள்ளது.

### மாணவர்

வில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

நாம் மாணவர் மத்தியில் எமது போராட்டம் பற்றிய கருத்துக்களை விதைக்க முயல்கிறோம். ஏனெனில் தமிழீழத்தை ஆளப் போகின்ற மாணவர்களாகிய நீங்கள் விடுதலைப் புலிகள் எவ்வகையான தியாகங்களைப் புரிந்து விடுதலையை பெற்றுத் தந்திருக்கின்றார்கள் என்பதை தெரிந்திருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சோ. தங்கன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட தளபதி திரு. வ. செல்வராசா, மகளிர் படையணி துணைத்தளபதி செல்வி ஜெனி, பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் நடராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்,

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் இவ்விழாவில்வழங்கப்பட்டன

மேஜர் முரளி ஞாபகார்த்த மலரை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

## ரி.பி. பத்மநாதன் காலமானார்

யாழ்ப்பாணத்தின் பிரபல உதைபந்தாட்ட பயிற்றுனர் ரி.பி. பத்மநாதன் தனது 60 தாவது வயதில்மாரடைப்பால் நேற்று முன்தினம் இரவு காலமானார் இவர் யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட பயிற்றுனராகவும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட பயிற்றுனராகவும் இருந்தவராவார்

தெல்லிப்பழையை பிறப்பிடமாக கொண்டஇவர் தற்போது தாவடியில் வசித்து வந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் பலராலும் ரிபி என அன்புடன் அழைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (42)

### மண்ணெண்ணெய்

கிறார். கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்திடம் இருந்தும்குடாநாட்டுக்குமண்ணெண்ணெய்யைஎடுத்துவருவதற்கு அனுமதிபெறுவதுகுறித்தும் ஏற்கனவே பேச்சுக்கள் நடைபெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. இதைத் தொடர்ந்துமண்ணெண்ணெய்யைக் குடாநாட்டுக்கு அனு

## முதலாவது பிறந்த தின

---

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

**கிளிநொச்சிக் கிளை**

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி போதனாசிரியருக்கான

**பதவி வெற்றிடம்**

மேற்படி பயிற்சி நெறிக்கான போதனாசிரியர்கள் இலங்கை தொழிநுட்பக் கல்லூரியில் தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிறசியில் பெற்ற சான்றிதழும், அனுபவமும் உள்ளதோடு 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 24-11-1992

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
இல 396, கண்டி வீதி,
கிளிநொச்சி.

வேதனம்: நேரில் கலந்தாலோசித்துத்தீர்மானிக்கப்படும்.

**பயிற்சிநெறி**

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும், தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சிஅதிகாரசபையும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் பின்வரும் பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

1. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் [க. பொ. த (சா/த) தமிழ் மொழி திறமைச் சித்தியுடன்]
2. ஆங்கில தட்டெழுத்து | சுருக்கெழுத்தாளர் [க. பொ. த (சா/த) ஆங்கிலமொழி திறமைச் சித்தியுடன்]
3. எழுதுவினைஞர் பயிற்சி
4. தையல் பயிற்சி
5. உதவித் தாதியர் பயிற்சி
6. கைவினைஞர் பயிற்சி
7. மோட்டார் சைககிள் திருத்துனர்
8. உழவு இயந்திர திருத்துனர்
9. தகர வேலைகள்
10. நீர் இறைக்கும் இயந்திர திருத்துனர் பயிற்சி
11. அச்சுக்கூட வேலைகள்
12. புகைப்படப் பிடிப்பாளர் பயிற்சி

மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சிக்கிளை,
396, கண்டி வீதி,
கிளிநொச்சி.
1992-11-02

பொன். வினாயகமூர்த்தி
கௌரவ செயலாளர்

(3605)

## அழைப்பு

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் மாமநிலா அறிவியலரங்கு

### செட்டிகுளம்

செட்டிகுளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற ஆசிரியர்கள் மடு திருப்பதி அகதி முகாம் பாடசாலையில் கல்வி கற்பித்து வருகின்றனர் செட்டிகுளம் பாடசாலைக்கு திரும்பி வராத இந்த ஆசிரியர்களுக்கு மன்னார் மாவட்டத்திற்கான இடமாற்றத்தை வழங்கப் போவதாக வவுனியா பிரதேசக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (தி)

### கிழக்கில்

ளதாகச் சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன

### பல்வேறு

தாரிகளுக்கு வெற்றிடமுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் தொழிலும் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் இந்நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

**கண்ணீர் அஞ்சலிகள்**

**திரு. ரி. பி. பத்மநாதன்**

தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக ஸ்தாபகரும், சிறந்த உதைபந்தாட்ட வீரரும், பிரபல உதைபந்தாட்ட பயிற்சியாளருமான திரு ரி.பி. பத்மநாதன் அவர்களின் மறைவுச் செய்தி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியது. அமரர் தம் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிறாஸ் கொப்பேர்ஸ்
விளையாடடுக் கழகத்தினர்
தெல்லிப்பழை

[சி-5381]

**மரண அறிவித்தல்கள்**

**சண்முகம் சுப்பிரமணியம்**

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பராய் மேற்கை வதிவிடமாகக் கொண்டவரும், பலாங்கொடை பெட்டியகல தோட்ட முன்னாள் அதிகாரியும் (FIELD OFFICER) ஆகிய திரு சுப்பிரமணியம் அவர்கள் (07-11-92) சனிக்கிழமை காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மனோகரபூபன் (MANAGING PARTNER MANOHARAN AND VETTIVEL), மோகனா, மகேந்திரராஜா (ACCOUNTANT SRI KRISHNA CORPORATION COLOMBO), ஆகியோரின் தந்தையும், கருணாதேவி, சுந்தரமூர்த்தி (VELLIAMPATI - VINK - ALAVEDDY), அகதா (ACCOUNTANT JINASENA GROUP) ஆகியோரின் மாமனாரும், வீணா (திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலை), கிருஷ்ணவேணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), மோகன் ஆகியோரின் பேரனுமாவார்:

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிறு (08-11-92) இன்று காலை அன்னை இல்லம், மானிப்பாய் வீதி, உரும்பராய் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

49, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி. கி. மனோகரபூபன்
[3601]

**செல்லத்துரை கனகலிங்கம்**

## முதலாவது பிறந்த தின வாழ்த்து (8-11-1992)



செல்வன்

## இரத்தினகுமார் மேனன்

மீசாலையைச் சேர்ந்த இரத்தினகுமார்விஜயரஞ்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் மேனன் தனது முதலாவது பிறந்தநினத்தை 8 11 92 இன்று லண்டனில் உள்ள தனது இல்லத்தில் மிகக்குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா அம்மா தஷா அக்கா லிஷா அக்கா இலங்கையில் வசிக்கும் அம்மப்பா அம்மம்மா ஸ்ரீ அன்ரா கொலண்டிலிருக்கும் நவம் அன்ரா சோதிச்சித்தப்பா கனடாவிலிருக்கும் நந்தினி அன்ரா ராஜன் சித்தப்பா லண்டனிலிருக்கும் வேணுமாமா இந்தியாவிலிருக்கும் அப்பப்பா அப்பம்மா கனடாவிலிருக்கும் விஜயன் பெரியப்பா பெரியம்மா அப்பன் சித்தப்பா றஞ்சி அத்தை குசலா அத்தை உதயா அத்தை மாமா மசசான்மார்கள் இலங்கையிலிருக்கும் அத்தைமார் மாமாமார் பாட்டிமார் லண்டனிலிருக்கும் சித்தப்பா சித்திமார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் யாவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

பிருந்தாவனம்,
மீசாலை. (3355)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

தொடர்ந்துமண்ணெண்ணெய்யைக் குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு அனுமதி கிடைத்திருப்பதாகக் கொழும்பில் இருந்து நேற்று மாலை எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி 5,000 பீப்பா மண்ணெண்ணெய்யையும் குடாநாட்டுக்கு ஏற்றிச் செல்வதற்கு ச்சிறியரக கப்பல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இக்கப்பலில் மண்ணெண்ணெய்யை ஏற்றுவதற்குத்திருகோணமலைத் துறைமுகம் உசிதமற்றது என்று கருதப்படுகிறது இதனால் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து இக்கப்பலில் மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களை ஏற்றுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது (க)

### பிறப்பு

குழந்தைகளுக்கும் இலங்கையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற கடவுச் சீட்டுக் கேட்கப்படுகின்றது இந்தியாவிற்கு செல்லும் பொது தாம் கடவுச்சீட்டுக் கொண்டு செல்லவில்லை எனப் பெற்றோர் சுட்டிக்காட்டியபோதும் பாதுகாப்பு அமைச்சு அதனை ஏற்க மறுத்துவருவதாகப் பெற்றோர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்

### வீரச்சாவு

னான நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்டினன்ட் இளஞ்செழியன் (ஏகாம்பரம் திருமேனி கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் இமையன் (முத்துக்குமார் யோகேஸ்வரன் பதிரகாளி கோவில்வீதி, பருத்தித்துறை) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் முழுநிலா அறிவியலரங்கு

**காலம்:** 09-11-1992 திங்கள்

**நேரம்:** பிற்பகல் 3-00 மணி

**இடம்:** குமாரசுவாமி மண்டபம்

மாலை: 300—3.30

'சர்வதேச அரசியல் விவகாரங்களில் புவிசார் அரசியலின் முக்கியத்துவம்'

திரு. பாலச்சந்திரன் தலைவர்
புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

3.30 — 4 30

'தமிழ் மக்களின் இடப்பெயர்வும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்'

திரு. கா. குகபாலன் சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியற்றுறை யாழ். பல்கலைக் கழகம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

(5338)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## விசேட பொதுக் கூட்டம்

காலம்:- *1992-11-29* ஞாயிறு

நேரம்:- *10-00* மணி

இடம்:- குமாரசுவாமி மண்டபம்

விடயம்:- மைதான விரிவாக்கம்

சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விசேட வேண்டுகோள்:- அங்கத்தவர்களின் முதற் பெயர், பெயர் நிரந்தர முகவரி, தற்காலிகமுகவரி, தகைமைகள், தொழில் போன்ற பூரண விபரங்களைப் பெற்று முழுமையான அங்கத்துவப் பதிவேடொன்று தயாரிப்பதறகான இறுதிக் கட்ட வேலைகள் சங்கத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதன்பின் அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படவுள்ளன. எனவே சகல அங்கத்தவர்களும் மேற்கூறிய விபரங்களுடன் தபாலில் அல்லது நேரில் தொடர்புகொண்டு உடன் அறிவிக்குமாறுகேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்

யாழ். இ. க
ப. மா. ச. (சி/5379)

## செல்லத்துரை கனகலிங்கம்

வேலணை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கனகலிங்கம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை லக்சுமியின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கஜேந்திரனின் அன்புத் தகப்பனாரும், இராசலிங்கம், யோகலிங்கம், சிவலிங்கம், மகேந்திரராசா, இராசகுலதர்மலக்சுமி, குகராஜா, கலாதரன், ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சாந்தராஜா, நாமகள், லீலாம்பிகை, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல 20, சபாபதி ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் (இன்று) ஞாயிறு மாலை 2.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

விலாசம்:
இல 20, சபாபதி லேன்,
(பூனாறி மரத்துக்கு முன்பாக)
காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
செ. குகராஜா

[3604]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 07-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6522

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

*27-6704, 24-4707, 24-4504, 22-4766, 24-2680, 42-2364, 28-7740, 24-3594, 26-6026, 22-7271, 26-4893, 42-3267, 28-6020, 28-1308, 40-8448, 41-6544, 27-6024, 26-4450 27-1531, 41-6784, 27-9083, 40-2829, 27-8515, 26-689 25-1840, 36-2954, 36-4808, 71-9553*

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;

*24-6243, 27-5775, 27-732, 40-2677, 27-1380, 28-2511 27-8999, 42-2323, 26-1349, 28-0657, 22-7566, 24-5734, 24-7941, 26-1098, 24-5958, 24-8710, 28-8956, 26.6775, 22-3611, 26-8674, 42-1464*